# பொதுக்காலத்தின் 28 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

அரசர்கள் இரண்டாம் நூலிலிருந்து வாசகம் 5: 14-17,
திருப்பாடல்கள் 98: 1. 2-3a. 3b-4,
திருத்தூதர் பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 8-13,
லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 17: 11-19)

## திருப்பலி முன்னுரை:

எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.

நன்றியுள்ளவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவரின் உதவியை நம்பிக்கையோடு கேட்கவும், பெற்ற நன்மைகளுக்கு முழு மனதுடன் நன்றி செலுத்தவும் இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. அற்புதங்களுக்காகவும், அதிசயங்களுக்காகவும் மட்டும் கடவுளைத் தேடுவது சரியல்ல என்பதை உணர நாம் அழைக்கப்படுகிறோம். நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அல்ல, இறைவனின் விருப்பத்தை முதன்மையாக நிறைவேற்ற இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். குணமடைந்த பத்து தொழுநோயாளர்களில் சமாரியரான ஒருவர் மட்டுமே திரும்பி வந்து இயேசுவுக்கு நன்றி செலுத்தினார். "மற்ற ஒன்பது பேர் எங்கே?" என்ற இயேசுவின் கேள்வி அவர் நன்றியை எதிர்ப்பார்ப்பவர் என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது. இறைவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நன்றி மறக்காதவர்களாய் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**வியத்தகு செயல்கள் புரிந்துள்ள தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் மீது அன்பும், பரிவும், பாசமும் கொண்டு பணியாற்றிடவும், நீர் வெளிப்படுத்திய திருவுளம் எதுவென கண்டுணர்ந்து செயற்பட வேண்டிய மனவுறுதியை அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலன்களின் ஊற்றே இறைவா,**

இவ்வுலகில் பல்வேறு நோய்களால் வருந்துவோர் நம்பிக்கையுடன் உம்மைத் தேடி வரவும், உமது குணமளிக்கும் வல்லமையால் நலம் பெற்று உமக்கு நன்றி செலுத்தவும் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பேரன்பையும் உறுதிமொழியையும் நினைவுகூரும் தந்தையே இறைவா!**

எந் நிலையிலும் மனந்தளராது எப்பொழுதும் எல்லாச் சூழ்நிலையிலும் இறைவனுக்கு நன்றி கூறும் நல்லுள்ளம் எம்மிடம் உருவாகிடவும், நீர் வெளிப்படுத்திய திருவுளம் எதுவென கண்டுணர்ந்து செயற்படவும் வேண்டிய அருள் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மூவொரு இறைவனே எம் இறைவா!**

எம் குடும்பத்தில் உள்ள பெற்றோர், பெரியோர் ஆகிய அனைவரையும் நாங்கள் ஒரு சுமையாகக் கருதாமல் அவர்கள் வழியாக நாங்கள் பெற்றுக் கொண்ட உம் ஆசீர்வாதங்களை எங்கள் பிள்ளைகளுக்கும், தலைமுறையினருக்கும் கொண்டு செல்லக் கூட்டுகுடும்பத்தின் நன்மைகளை அறிந்துச் சாட்சிய வாழ்வு வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பரிவன்புமிக்க எம் இறைவா!**

எம் இளையோர், இளம் பெண்கள், சிறுவர், சிறுமியர் இவர்களின் மனங்களில் இறுமாப்பு, ஆடம்பரம் என்ற இருள் சூழ்ந்துக் கொள்ளமால் அன்பு, பிறர்நலம் காணும் நல்லெண்ணம் வளர்ந்திடவும், தாழ்வுமனப்பான்மை அகற்றித் தாழ்ச்சியில் உயர்ந்து ஓங்கிடத் தேவையான வரமருளவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**குடும்பங்களின் பாதுகாவலான எம் இறைவா!**

எம் குடும்பங்களில் உள்ள எம் பெற்றோர், பெரியோர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் பிரிவினைகள் கருத்துவேறுபாடுகள் இல்லாமல் வாழத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலந்தரும் மருத்துவரே தந்தையே இறைவா!**

இன்று மக்களைத் தாக்கி, அவர்களை அலைக்கழிக்கும் போதைப் பொருள் பாவனை, களியாட்டம், தீமைகள் அனைத்தையும் அழித்து மக்களை நிம்மதியோடு வாழச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

www.tamilcatholicnews.com